எ.சா.1.பூர்ணிமா, க/பெ.குணசேகர்.
எதிரி ஆஜர்.
புகார்தாரர் ஆஜரில்லை.
<u>புகார்தாரர் தரப்பில் குறுக்குவிசாரணை.</u>

நான் **B**.**Sc Psychology** படித்துள்ளேன். **DHFL** என்ற நிறுவனத்தில் நான் எப்போது பணிக்கு சேர்ந்தேன் என்றால் 2014 ஆண்டு ஆகும். 2014 ம் ஆண்டு முதல் மேற்படி நிறுவனத்தில் பணியில் இருந்து வருகிறேன் என்பதற்கான ஆவணமோ அல்லது **Appointment Order**-ஐ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் குணசேகர் சக்ரா ஹோம்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வருகிறார். என் கணவருக்கும் வாதி நிறுவனத்தின் சார்பு நிறுவனங்களுக்குமிடையே பண வரவு செலவுகள் இருந்து வருகிறதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. கடந்த 15.12.2017 அன்று சிவம் **Funds** என்ற நிறுவனத்திற்கு சக்ரா ஹோம்ஸ் என்ற நிறுவனத்திலிருந்து **RTGS** மூலம் பணப்பரிவர்த்தனை நடைபெற்றுள்ளது என்றால் சரிதான்.

2. நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள எ.சா.ஆ.9 ஆவணம் கணினியில் பராமரிக்கப்படுவது என்றால் சரிதான். மேற்படி எ.சா.ஆ.9 ஆவணம் யாரால் பராமரிக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டு எதவும் கையெழுத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி எ.சா.ஆ.9 மற்றும் எ.சா.ஆ-10 கணினி நகல்கள் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65-**B**-ன் படியான சான்றிதழுடன் இணைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பணியாற்றி வரும் **DHFL** என்ற நிறுவனம் தனியார் நிறுவனம் ஆகும். மேற்படி நிறுவனம் ஹோம் லோன்ஸ் தொழில் செய்து வருகிறது. எனக்கு **Axis Bank** ல் கணக்கு உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும வழக்கு காசோலையான ம.சா.ஆ.3 **Axis Bank** காசோலை என்னுடையது என்றால் சரிதான். ம.சா.ஆ.3 காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையது தான். வாதியின் சார்பு நிறுவனமான சிவம் **Funds** நிறுவனத்தில் எனக்கு வரவு செலவு இருந்தது

என்று காட்டக்கூடிய விவரங்களுக்காக எனது **Axis Bank** கணக்குப்பட்டியலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வரவு ஆகியுள்ள விவரத்திற்காக காட்டியுள்ளேன். எ.சா.ஆ.5, எ.சா.ஆ.9 மற்றும் எ.சா.ஆ.10 ஆகிய ஆவணங்கள் என்னால் இவ்வழக்கிற்காக பொய்யாக ஜோடிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

3. எ.சா.ஆ.6 ஆவணத்தில் நிறுவனத்தின் பெயரை தவிர இதர விவரங்கள் **Printed Formate**ல் உள்ளன என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் நிறுவனத்தின் பெயர் ரப்பர் ஸ்டாம்பால் சீல் வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி எ.சா.ஆ.6 ஆவணம் இந்த வழக்கிற்காக பொய்யாக என்னால் ஜோடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி எ.சா.ஆ.6 ஆவணத்திற்கும் அதில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வாதியின் சார்பு நிறுவனத்தில் கடன் பெற்றதாகவும், அப்போது ஆதரவிற்காக கொடுத்திருந்த காசோலைகளை நாளது தேதி வரை திரும்ப பெறுவதற்கான நடவடிக்கைகள் ஏதேனும் மேற்கொண்டேனா என்றால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. நடவடிக்கை எடுக்காததற்கு காரணம் என் கணவர் மூலமாக கடனை திருப்பி செலுத்தியதால் என் கணவர் ஆவணத்தை திருப்பி பெற்றுத்தருவார் என்ற நம்பிக்கையில் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எ.சா.ஆ.7 மற்றும் எ.சா.ஆ.8 ஆவணங்கள் இவ்வழக்கிற்கு எந்தவித்திலும் தொடர்பில்லாதவை என்று சொன்னால் சரியல்ல. நான் புகார்தாரர் நிறுவனத்திடமிருந்து பெற்ற தொகையை திருப்பி செலுத்தாமல் ஏமாற்ற வேண்டும் என்பதற்காக இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத மற்றும் பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரர் நிறுவனத்திடமிருந்து கடந்த 22.05.2019 அன்று பெற்ற கடன் தொகையை சட்டப்படியாக தீர்க்கும்பொருட்டு வழக்கு காசோலையை கொடுத்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் இவ்வழக்கின் புகார்தாரர் ரத்தினம் என்பவரை யாரென்றே தெரியாது என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

4. இவ்வழக்கு காசோலை திரும்பியது குறித்து எனக்கு சட்டப்படியான வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது. மேற்படி அறிவிப்பிற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், மேற்படி அறிவிப்பிற்கு முன்பு எனது வங்கி கணக்கு பட்டியலை நான் பார்த்தபோது, மேற்படி காசோலை எனது வங்கி கணக்கில் வசூலுக்கு வந்து சென்றது என்ற விவரத்தை தெரிந்த பின்னிட்டு **Stop Payment** க்காக வங்கியின் இணையதள முகவரியில் **online message** ஆக **submit** செய்தேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.6 வழக்கறிஞர் அறிவிப்பில் மேற்படி காசோலை **Stop Payment** காரணத்திற்காக திருப்பப்பட்டது என்று குறிப்பிட்டு அறிவிப்பு அனுப்பிய பிறகு என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் நான் சட்டப்படியான நடவடிக்கை எதுவும் கொடுக்கவில்லை. உண்மையிலேயே நான் புகார்தாரர் நிறுவனத்திற்கு பணம் கொடுக்கவேண்டியிருந்தது என்ற காரணத்தால் தான் எந்தவிதமான சட்டப்படியான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரர் சார்பு நிறுவனத்தில் கடன் பெற்றுக்கொண்டு பொறுப்பிற்காக இந்த வழக்கு காசோலையை கொடுத்ததாக பொய்யான விவரங்களை கூறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை. இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/.எம்.சார்லஸ் ஆல்பர்ட்,
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.